Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகை யின் தூதன்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 71 அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சங்.30:5. அக்டோபர் 2025 No.10

அனுதினமும் தேட வேண்டிய ஆசீர்வாதங்கள்

Blessings to be daily sought

James Smith (1802 - 1862)

ஒவ்வொரு நாளும் அனேக தேவைகளும் பெரிய ஆசீர்வாதங்களும் நமக்குத் தேவை. இரக்க ஆசனத்தில் நாம் கிட்டிச் சேர்ந்து கெஞ்சும் போது இவை களைப் பெற்றுக் கொள்ளலாம். நம் முடைய தேவைகளெல்லாம் இயேசு விடமுண்டு. நமக்காகவே அவை அவரி டத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கும் விதத்தில் நாம் அவற்றைத் தேட வேண்டும். "**தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்...**" *(மத்.7:7)* என்பது அவரது வாக்கு. எனவே அவரது கிருபாசனத்தைக் கிட்டிச் சேர்ந்து ஏழு நற்காரியங்களைப் பெற்றுக் கொள்வோம்.

1. விசுவாசம்

பிற அனைத்து ஆசீர்வாதங் களுக்கும் இது முன்னோடியாயிருப் பதால் இது ஒரு பெரிய ஆசீர்வாதம். விசுவாசமுள்ளவனுக்கு வாழ்வுக்கும் தேவதன்மைக்கும் தேவையான அனைத் தையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க் கலாம். உண்மையான விசுவாசம் உலகத் தை ஜெயிக்கும். அது அன்பினால் கிரியை செய்து இருதயத்தைப் பரிசுத்தப் படுத்தும். அது மறுபடி பிறக்க நிரூப ணமும், நித்திய ஜீவனுக்கு ஆரம்பமும் அனைத்து நற்கிரியைகளுக்கும் ஆதார மாகவுமிருக்கிறது. தேவனுடைய வாக் குத்தத்தங்களை மதித்து, தழுவிக் கொண்டு, பெற்றுக்கொண்டு ஆண்டவ ராகிய இயேசுவைப்பற்றிக்கொண்டு, தேவ னுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொண்டு, கர்த்தருடைய பெலத்திலும், நாமத்திலும் நிலத்தை எடுத்துக் கொள்ளவும், எதிரியை மேற்கொள்ளவும் சாத்தியமாகிறது. கர்த்தருக்காகக் காத்தி ருந்து, வாக்குத்தத்தங்களைக் கெஞ்சிக் கேட்டு, அனைத்து ஆசீர்வாதங்களையும் ஆத்துமாவுக்குள் சமாதானத்துடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டுவந்து விடு கிறது. விசுவாசம் பயத்தை அடக்கும் சந்தேகத்தை நொறுக்கும், ஆத்துமாவை சந்தோஷத்தாலும் சமாதானத்தாலும் நிரப்பும். இருளில் நடக்கவும், மந்தார மான நாட்களிலும் நம்பிக்கையுடனிருக் கவும், கர்த்தருடைய செயல்களைக் குறித்து எப்போதும் நன்மையாகவே பேசவும் செய்கிறது. ஆண்டவரே இந்த விசுவாசத்தை எங்களில் அதிகமாகத் தாரும்!

2. ஒரு நல்ல நம்பிக்கை

இது கிருபையிலிருந்து தோன்றி தூய ஆவியால் உருவாக்கப்பட்டு, இதைக் கொண்டிருப்பவர்களை வெட்கத்தி லிருந்து பாதுகாக்கிறது. அது நல்லவை களில் உறுதியாயிருந்து, எதிர்காலத்திற் காக கண்களை உறுதிப்படுத்தி, நம்மை விரக்தியிலிருந்தும் நிராசையிலிருந்தும் பாதுகாக்கிறது. நல் நம்பிக்கை ஆத்து மாவுக்கு உறுதியானதும் நிலையானது மான நங்கூரமாயிருக்கிறது. அது இரக்கத்தின் கப்பலை கொந்தளிக்கும் கடலில் தடுமாறாமலும், சொரி மணலில் சிக்கிவிடாமலும், மூழ்கியிருக்கும் பாறைகளில் மோதி விடாமலும் நித்திய சிங்காசனத்திற்கு கொண்டு செல்கிறது. இது கிறிஸ்துவை மையமாகக் கொண்டு, வாக்குத்தத்தங்களை ஆதாரமாகக் கொண்டு மகிமையையும், கனத்தையும் சாவில்லாமையையும் எதிர்பார்க்கிறது. ஆண்டவரே, கிருபையால் இந்த நல் நம்பிக்கையினை எனக்குத் தாரும். நான் கிருபையில் பெருகவும் நம்பிக்கையில் வளரவும் தூய ஆவியின் வல்லமையை தருவீராக.

3. தயாள சிந்தை

இது ஒருபோதும் நம்மை ஏமாற்றாது. தேவ அன்பு இருதயத்தில் ஊற்றப்பட்டு, நாம் அவரை நேசிக்கவும், அவர் நேசிக்கிற அனைவரையும் நேசிக்கவும் செய்கிறது. இது தேவனிட மிருந்து வந்து, தேவனில் மையம் கொண்டு, தேவனுக்கு நேராக வழி நடத்தி, அதை உடையவர்களை தேவனைப் போலாக்குகிறது. தூய்மை யும் தெய்வீகமானதுமான தயாள சிந்தை தூய்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து, தேவ மகிமைக்கான உற்சாகம் காண்பித்து ஆண்டவருடைய காரியங்களில் பக்தி வைராக்கியமுடையவர்களாக்குகிறது. அது தெய்வீக தன்மையுடன் எழும்பி, மத்தியஸ்தரின் இதயம் வழியாக பாய்ந்து தூய ஆவியால் நமது உள்ளங்களில் திசை திருப்பப்பட்டு தெய்வீக குணாதிசயத் திற்கு வழிநடத்தும் காரணியாயிருக் கிறது. அது தேவனைப் பிரியப்படுத்தத் தவறுவதில்லை. மக்களுக்கு பயன்பட வும், தன்னை சந்தோஷமாக வைத்துக் கொள்ளவும் ஜாக்கிரதையுடையது. இது அழியாத் தன்மை உடையது. மேலும் வல்லமையாய் செயல்படவும் அதன் விளைவுகளில் மகிமையானதுமாகும். ஆண்டவரே என் இருதயத்தினை தூய பரம அன்பினால் நிரப்புவீராக!

4. தாழ்மை

இது மிக விலையேறப்பெற்ற கிருபையாகும். இப்போது நான் இதில் அதிக அழகு, சிறப்பு மற்றும் மகிமை இருப்பதை காண்கிறேன். இதுதான் நமது இரட்சகர் எப்போதும் அணிந்திருந்த ஆடை. இந்தக் கிருபைதான் அவர் செய்த சொல்லிய எல்லாவற்றிற்கும் மெரு கூட்டியது. இது நமது சிறந்த ஆடை களில் ஒன்று. இது இல்லாவிட்டால் ஆத்துமா நிர்வாணமாகக் காணப்படும் *(1பேது.5:5)* இந்தப் பண்பு இல்லாததால் சபை உள் பிரிவுகளால் பல கிழிசல்களை ஏற்படுத்துகிறது. விசுவாசிகள் தங்களுக் குள் பல சோதனைகளையும் சிலுவை களையும் கொண்டு வந்து பிரச்சனை மற்றும் வருத்தத்தின் கசப்பான விதை களை விதைக்கிறார்கள். நான் உண்மை யாக தாழ்மையுடனிருந்தால் நான் சந்தோஷமாயிருப்பேன். ஏனெனில் இப்படிப்பட்டவர்களோடு யெகோவா வாசம் பண்ணுகிறார் *ஏசா.57:15.* இப்படிப் பட்டவர்களை அவர் அன்போடும் மகிழ் வோடும் திருப்தியோடும் பார்க்கிறார் *ஏசா.66:2.* பெருமை தேவனுக்கு அரு வருப்பானது, மனிதருக்குத் தீமை விளை விக்கக்கூடியது, சாத்தானை நம்மோடு பிணைத்து வைக்கிறது. தேவன் பெரு மையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் *யாக்.4:6.* அவர் அவர்களை தூரப்படுத்தி அவரை நெருங்கவிடாதிருக்கிறார் *சங்.88:6.* அவர்களுக்கு நித்திய அழிவைக் கொடுப் பதாக பயமுறுத்துகிறார். ஆண்டவரே உண்மையான தாழ்மையை எனக்குத் தாரும். நான் தாழ்மையால் தரிப்பிக்கப் பட்டு ஒவ்வொரு நாளும் தாழ்மையுடன் வாழட்டும்.

5. அர்ப்பணம்

தேவ சித்தத்திற்கு நம்மை அர்ப்பணம் செய்ய வேண்டும். வழக்க மாகவே தேவ சித்தத்திற்கு அர்ப்பணத் துடன் வாழ்வது சிறப்பானது. அனைத்து காரியங்களிலும் அவரது சித்தத்திற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். நாம் அடிக்கடி நமது சித்தம், நமது வழி என்று எண்ணி அது தேவனுக்கு உடன்பாடாக இருக்குமா என்று சிந்திப்பதே இல்லை. அவரது சித்தம் ஞானமானது, ஏனெனில் அவர் ஒருவரே ஞானமுள்ளவர். அது நன்மையானது, ஏனெனில் அவர் நல்லவர். அது நீதியானது, ஏனெனில் அவர் நீதியுள்ளவர். அவர் நமது கிரியைகளில் மேலானவர். அவரது சித்தம் தமது நாமத்தை மகிமைப் படுத்

(4 -ம் பக்கம் பார்க்க)

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P. Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங்.85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி, **உன் சுகவாழ்வு** சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும் ஏசாயா 58:8.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 அக்டோபர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகுமனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.

PRAY FOR INDIA
ஜெப கையேடு

வாசகரில் சிலர் இந்த ஆண்டும் வழக்கம் போல ரூபாய் 100,150,200 என்று அனுப்பிவருகிறார்கள். 2026 -ம் ஆண்டு உங்களுக்கு பத்திரிகை அனுப்ப குறைந்த பட்சம் ரூபாய் **500** அனுப்புங்கள்.

காணிக்கை அனுப்புகிற அனைவருக்கும் ரசீதுடன், 64 பக்கங்களில் 31 பாடல்கள் அடங்கிய *மிக அழகிய ஜெப கையேடு* இலவசமாக சாதாரண தபாலில் அனுப்புகிறோம்.

ஜெப காலண்டர் 2026

கர்த்தருக்குச் சித்தமானால், 2026-ம் ஆண்டு **ஜெப காலண்டர்** இந்த ஆண்டு *மிக அழகாய்* அச்சிடப்பட்டு, டிசம்பர் மாதம் வருகையின் தூதன் வாசகர் அனைவருக்கும் இலவசமாக சாதாரண தபாலில் அனுப்புவோம்.

மாத காணிக்கை, சிறப்பு காணிக்கை

வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள். தினந்தோறும் காலை **10.00** மணி முதல் **1.00** வரை, மாலை **2.00** மணி முதல் **6.00** வரை அலுவலக பணி செய்யும் என்னையும், உடன் ஊழியர்களையும் நினைத்து, ***மாதந்தோறும்*** தாங்குங்கள்.

காகிதம், அச்சுக்கூலி, அனுப்புவதற்கான செலவுகள், தபால் கட்டணம், மின் செலவு, அலுவலக ஊழியர்களுக்கான ஊதியம் அனைத்தையும் நாங்கள் *மாதந்தோறும்* சந்திக்க வேண்டுமே!

மாதந்தோறும் தபாலில் / வங்கி வழியாக உங்களால் அனுப்ப இயலாவிட்டால் 3 மாதம், 6 மாதம், வருடத்திற்கு ஒரு முறை சிறப்பு காணிக்கை அனுப்புங்கள். *வருட இறுதியில் காலண்டர், ஜெப கையேடு கொரியர் வழியாக* அனுப்புவோம்.

ஜெபக்குறிப்பு 6. ***உலக நண்பர்களுக்காக***

ஒவ்வொரு ஆண்டும் 31-ம் தியதி சில உலக நண்பர் களுக்கு காலண்டருடன் இனிப்பு வழங்கி வருகிறேன். நியூபோர்ட் தெருவில் உள்ள டெய்லர், ஆடிட்டர், லாட்ஜ் உரிமையாளர், பிளாஸ்டிக் கடை உரிமை யாளர், தெரு ஓரத்தில் இருக்கும் ஸ்டேஷனரி கடை, xerox கடை, நமக்கு தபால் கொண்டு தருபவர், ஆட்டோ ஓட்டுநர், முன்னாள் ஊழியர்கள் போன்றவர்களுக்கு இதைச் செய்கிறேன்.

வருகையின் தூதன்
ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

இனிப்பு ஏன்?

O taste and see that the **LORD** is good!
blessed is the man that trusteth in him.

கர்த்தர் நல்லவர் என்பதை **ருசித்துப்** பாருங்கள்; அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் சங்கீதம் 34:8.

ஒரு ஆண்டு இந்த வசனத்தை அட்சிட்டிருந்தோம்; கடந்த ஆண்டு, "**அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார்**" யோவான் 14:6 வசனம் அச்சிட்டிருந்தோம்.

இந்த ஆண்டு:

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில்வந்தார் 1தீமோ.1:15
இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும்நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் 1யோவான் 1:7

இதுதானே சுவிசேஷம்! உலக நண்பர்களில் இந்து மதத்தை சார்ந்தவர்கள், இஸ்லாமியர், வட இந்திய மக்கள் இருக்கிறார்கள். நீங்களும் காலண்டர்கள், வசன போடுகள், வேத புத்தகங்கள் வாங்கி, கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு அன்போடு வழங்குங்கள். இந்த ஊழியத்தை செய்வதற்கு முன் முழங்காலில் நின்று கண்ணீரோடு அவர்களுக்காக ஜெபியுங்கள்.

வாசகர் கடிதம் 2.9.2025

கர்த்தருக்குள் அன்புள்ள வருகையின் தூதன் பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இப்பவும் நான் தங்களது பத்திரிகையான **வருகையின் தூதன்** பத்திரிகைகளை தங்களது தகப்பனார் காலத்திலிருந்தே நான் வாஞ்சையோடு படிக்கிற ஒரு பத்திரிகை. வேறு எந்த ஆவிக்குரிய பத்திரிகையைக் காட்டிலும் **வருகையின் தூதன்** பத்திரிகை எனது ஊழியத்திற்கேற்ற நல்ல ஆலோசனைகளையும், ஆவிக்குரிய பிரகாரமாக நல்ல போதனைகளையும் நான் இவ்வளவு ஆண்டு களாக பெற்று அதன் மூலமாக நானும் கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஊழியங்களிலும் அநேக ஆசீர்வாதங்களை நான் பெற்றிருக்கி றேன். ஆகவே, இந்த 2025 ஆம் ஆண்டிற்கான சந்தா ரூ **500/-** அனுப்பியுள்ளேன் பெற்றுக் கொள்ளுங்கள். மேலும் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் எனக்கு பத்திரிகை வரவில்லை தயவு செய்து எனக்கு ஜனவரி மாதம் முதல் இருந்து மொத்தமாக பத்திரிகை அனுப்பி வைக்கவும். ஏனென்றால் நான் ஒவ்வொரு வருடமும் பத்திரிகை பத்திரப்படுத்தி வைத்து மீண்டும் மீண்டும் சமயம் கிடைக்கும் பொழுது வாசிப்பது வழக்கம். ஆகவே தயவு செய்து ஜனவரியில் இருந்து பத்திரிகையை எனக்கு அனுப்பி வைக்கவும்.

கடந்த வருடம் தொடர்ந்து பத்திரிகை அனுப்பின தயவுக் காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கர்த்தர் தாமே தங்களின் எல்லாவித ஊழியங்களையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

இப்படிக்கு,
Pr. S.R.S., ஈரோடு

(3-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாத செய்தி:

தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்

1. வருந்திக் கேட்டுக் கொண்டாள்

பின்பு ஒரு நாள் எலிசா சூனேமுக்குப் போயிருக்கும்போது, அங்கே யிருந்த கனம் பொருந்திய ஒரு ஸ்திரீ அவனைப் போஜனம் பண்ண **வருந்திக் கேட்டுக் கொண்டாள்**; அப்படியே அவன் பயணப்பட்டு வருகிற போதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்குவான் 2 இரா.4:8.

★ ★ ★

அத்தருணத்தில் தாங்கள் போகிற கிராமத்துக்குச் சமீபமானார்கள். அப்பொழுது அவர் **(இயேசு)** அப்புறம் போகிறவர் போலக் காண்பித்தார்.

அவர்கள் அவரை நோக்கி: நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்கால மாயிற்று, பொழுதும்போயிற்று, என்று அவரை **வருந்திக் கேட்டுக் கொண்டார்கள்,** அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்லூக்.24:28,29.

2. அறைவீட்டைக் கட்டினாள்

அவள் தன் புருஷனை நோக்கி: இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற தேவனுடைய மனுஷனாகிய **இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்.**

நாம் மெத்தையின் மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜை யையும், நாற்காலியையும், குத்துவிளக் கையும் வைப்போம்; அவர் நம்மிடத் தில் வரும் போது அங்கே தங்கலாம் என்றாள் 2 இரா.4:9,10.

நம்முடைய தேவன் பரிசுத்தர்

சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொரு வனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந் தன; அவனவன் இரண்டு செட்டை களால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து;

ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள் ஏசாயா 6:2,3.

யாவரோடும் சமாதானமாயிருக் கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே எபி.12:14.

3. சுகமாய்க் குடியிருந்தாள்

ஒருநாள் அவன் அங்கே வந்து, அந்த அறைவீட்டிலே தங்கி, அங்கே படுத்துக்கொண்டிருந்தான்.

அவன் தன் வேலைக்காரனாகிய கேயாசை நோக்கி: இந்தச் சூனேமி யாளை அழைத்துக் கொண்டுவா என்றான்; அவளை அழைத்துக் கொண்டு வந்தான்; அவள் அவனுக்கு முன்பாக நின்றாள்.

அவன் கேயாசியைப் பார்த்து: இதோ, இப்படிப்பட்ட சகல சலக்கர ணையோடும் எங்களை விசாரித்து வருகி றாயே, உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்? ராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேச வேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக் கேள் என்றான். அதற்கு அவள்: என் ஜனத்தின் நடுவே நான் **சுகமாய்க் குடியிருக்கிறேன்** என்றாள் 2இராஜா. 4:11-13.

4. பிள்ளை இல்லாதிருந்தாள்

அவளுக்குச் செய்யவேண்டியது என்னவென்று கேயாசியை அவன் கேட்டதற்கு; அவன், அவளுக்குப் பிள்ளை இல்லை, அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்றான்.

அப்பொழுது அவன்: அவளைக் கூப்பிடு என்றான்; அவளைக் கூப்பிட்ட போது, அவள் வந்து வாசற்படியிலே நின்றாள்.

அப்பொழுது அவன்: ஒரு பிராண உற்பத்திகாலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப் பாய் என்றான். அதற்கு அவள்: ஏது? தேவனுடைய மனுஷனாகிய என் ஆண்டவனே, உமது அடியாளுக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்றாள்.

அந்த ஸ்திரீ கர்ப்பந்தரித்து, எலிசா தன்னோடே சொன்னபடி, ஒரு உற்பத்திகாலத்திட்டத்தில் ஒரு குமா ரனைப் பெற்றாள்2 இராஜா.4:14-17.

5. தேவனுடைய மனுஷனிடத் திற்குப் போனாள்

அந்தப் பிள்ளை வளர்ந்தான், ஒரு நாள் அவன் அறுப்பறுக்கிறவர்களிடத் திலிருந்த தன் தகப்பனண்டைக்குப் போயிருக்கும் போது,

தன் தகப்பனைப் பார்த்து: என் தலை நோகிறது, என் தலை நோகிறது என்றான்; அப்பொழுது அவன் வேலைக் காரனிடத்தில், இவனை இவன் தாயினி டத்தில் எடுத்துக் கொண்டு போய் விடு என்றான்.

அவனை எடுத்து, அவன் தாயினி டத்தில் கொண்டு போனபோது, அவன் மத்தியான மட்டும் அவள் மடியில் இருந்து செத்துப் போனான்.

அப்பொழுது அவள் ஏறிப்போய், அவனை தேவனுடைய மனுஷன் கட்டிலின்மேல் வைத்து, அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக் கொண்டுபோய்,

கர்மேல் பர்வதத்திலிருந்த தேவனுடைய மனுஷனிடத்திற்குப் போனாள்; 2 இராஜா.4:18-25.

6. தேவனுடைய மனுஷனிடத்தில் வந்து, அவன் காலைப் பிடித்துக் கொண்டாள்

தேவனுடைய மனுஷன் தூரத்திலே அவளை வரக்கண்டு, தன் வேலைக்காரனாகிய கேயாசியைப் பார்த்து: அதோ சூனேமியாள் வருகிறாள்.

நீ அவளுக்கு எதிர்கொண்டு ஓடி, நீ சுகமாயிருக்கிறாயா? உன் புருஷன் சுகமாயிருக்கிறானா? அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா என்று அவளிடத்தில் கேள் என்றான். அவள்: சுகந்தான் என்று சொல்லி,

பர்வதத்திலிருக்கிற தேவனு டைய மனுஷனிடத்தில் வந்து, அவன் காலைப் பிடித்துக் கொண்டாள்; அப்பொழுது கேயாசி அவளை விலக்கி விட வந்தான்; தேவனுடைய மனுஷன்: அவளைத் தடுக்காதே; **அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்து வைத்தார் என்றான்** 2 இரா.4:25-27.

7. நான் உம்மை விடுகிறதில்லை என்றாள்

அப்பொழுது அவன் கேயாசி யைப் பார்த்து: நீ உன் இடையைக் கட்டிக் கொண்டு, என் தடியை உன் கையில் பிடித்துக் கொண்டு,... போய், என் தடியை அந்தப் பிள்ளையின் முகத்தின் மேல் வை என்றான்.

பிள்ளையின் தாயோ: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றாள், அப்பொழுது அவன் எழுந்திருந்து அவள் பின்னே போனான்.

அவன் எழுந்து, அறைவீட்டில் இங்கும் அங்கும் உலாவி திரும்பக்கிட்டப் போய் அவன் மேல் குப்புறப் படுத்தான்; அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான்.

அப்பொழுது அவன்: கேயாசி யைக் கூப்பிட்டு, அந்தச் சூனேமியாளை அழைத்துக் கொண்டுவா என்றான்; அவளை அழைத்துக் கொண்டு வந்தான்; அவள் அவனிடத்தில் வந்த போது; அவன், உன் குமாரனை எடுத்துக் கொண்டு போ என்றான்.

அப்பொழுது அவள் உள்ளே போய், அவன் பாதத்திலே விழுந்து, தரைமட்டும் பணிந்து, தன் குமாரனை எடுத்துக் கொண்டு வெளியே போனாள் 2 இராஜா.4:29-37.

நீ சுகமாயிருக்கிறாயா?
உன் புருஷன் சுகமாயிருக்கிறானா?
அந்தப் பிள்ளை சுகமாயிருக்கிறதா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)
அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

2026 தமிழ்நாடு தேர்தலுக்காக

ஜெபிக்கவும்

அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?
சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செல்வார் என்று அவர்களுக்குச் சொல்லுகிறேன் லூக்கா 18:7,8.

(1 -ம் பக்கத் தொடர்ச்சி)

துவது. அவை மக்களுக்கு பயன்தர வேண்டும். அவரது எதிரிகளை தாழ்மைப் படுத்த வேண்டும். என் வாழ்வில் இன்னும் அதிகமான அர்ப்பணத்தைத் தாரும் தேவனே! எனது மாம்ச இருதயம் அழிக்கப்பட்டு, முழு ஆத்துமா முழுமை யான இனிய அர்பணத்திற்கு கொண்டு வரப்படட்டும்.

6. ஞானத்தின் ஆவியும் வெளிப்படுத்தலின் ஆவியும்

(இயேசுகிறிஸ்துவின் அறிவில் எபே.1:17)

இது நமக்கு ஒரு ஆழமான தேவை. எனவே நாம் அனுதினமும் இதைத் தேட வேண்டும். இன்னும் நாம் கிறிஸ்துவைப் பற்றி சரியாக அறிந்து கொள்ளவில்லை. ஆசீர்வாதமான ஆவி யானவர் தேவனைப் பற்றிய அவரது மகிமை அவரது நபரத்துவம், குணா திசயம், அவரது பணியின்தகுதி, அவரது இருதயத்தின் அன்பு, அவரது இரக்கத் தின் மதிப்பு, அவரது கிருபையின் தாராளம் அவரது உருக்கத்தின் ஆழம் அவரது கருணையின் பரிவு, கீழ்ப் படிதலின்மேன்மை, அவரது பணிகளின் பரிபூரணம் மற்றும் அவரது நிறைவின் அளவிட முடியாத தன்மை ஆகிய வற்றை நமக்கு வெளிப்படுத்த வேண்டும். அவரையும் அவரது உயிர்த் தெழுதலின் வல்லமையையும் அவரது மரணத்தின் வெற்றியையும் அறிய வேண்டும்! தூய ஆவியானவரே, இயேசு பிதாவானவரை மகிமைப்படுத்துவதை நீர் வெளிப்படுத்த வேண்டும். நீரே ஞானத்தின் ஆவியும் வெளிப்படுத்தலின் ஆவியுமாக எங்களில் இருக்கிறீர். எனவே நாங்கள் கிறிஸ்துவை முழுவது மாய், இதயபூர்வமாய் நேசிக்கவும், சரீரம், ஆத்துமா, ஆவி இவற்றால் மகிமைப்படுத்தவும் உதவி செய்யும். அவரை இன்னும் அதிகமாய் அறியவும், அதிகமாய் அவருடைய வார்த்தையை நம்பவும், அவரைப் போல் நடக்கவும், அதிகமாய் அவரை நேசிக்கவும், அழிந்து போகும் ஆத்துமாக்களுக்கு அவரை அறிவிக்கவும் உதவி செய்யும்.

7. பயன்படுதல்

இருதயம் பயன்படும் தன்மை யுள்ளதாயிருக்க வேண்டும். பாவி களுக்கு, பரிசுத்தவான்களுக்கு, இளைஞ ருக்கு, வயோதிபருக்கு யாவருக்கும் பயன்படும் வாழ்க்கை வேண்டும். பயனுள்ள வாழ்வு கிறிஸ்தவத்துக்கு ஒரு அணிகலன் போன்றது. சுவிசேஷம் நாம் எப்போதும் நன்மை செய்ய வேண்டும் என்றும் மக்களோடு தொடர்பிலிருக்க வேண்டும் என்றும் போதிக்கிறது. நாம் ஏதோ ஒரு வட்டத்தில் பயனுள்ளவர் களாக இருக்க முயற்சிப்போம். அதற் குரிய ஒரு வாசலைத் திறந்து தரும்படி ஆண்டவரிடம் கேட்போம். அவர் கிருபை நமது உழைப்பை வெற்றி யடையச் செய்யட்டும். கிருபை, மகிமைக்கு ஏதுவாயிருந்து நாம் பயன் படும் வழியை நமக்குக் காண்பிக்கிறது. நமக்கு மிகுந்த கிருபை கிடைத்தால் நாம் திருப்தியடைய மாட்டோம். நாம் தேவனை மகிமைப்படுத்தும் போது நாம் அவர் சித்தப்படி பாடனுபவித்தோம் என்பதை அறிவோம். கிருபைப் பெருக தேவனை மகிமைப்படுத்தவும் சுற்றிலு முள்ளவர்களுக்கு பயனுள்ளவர்களா யிருக்கும் தாகம் அதிகரிக்கும். ஒருவன் பயனற்றவனாக வாழ்ந்தால் அவன் தாழ்வானவன்.

அன்பானவர்களே, அனுதின மும் தேவனிடமிருந்து விசுவாசத்தைப் பெற்று விசுவாசத்தில் நிலைத்து தேவனை மகிமைப்படுத்துவோமாக. தேவனுடைய இரக்கத்தில், உயிரோட்ட மான, பலத்த விசுவாசத்தைப் பெற நாடுவோம். இந்த வாழ்வு சோதனை களையும் வேதனைகளையும் உள்ளடக் கியது. அன்பான தேவனிடமிருந்து தூய அன்பை நாடுவோம். எதை நாம் கொண் டிருந்தாலும், எதை நாம் செய்தாலும் எவ்வளவு பாடுபட்டாலும், தயாள குண மில்லாவிட்டால் எந்த பயனுமில்லை. நாம் ஆழமான தாழ்மையை நாடுவோ மாக. தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி அவரது சந்தோஷத்தில் உயர்ந்து, தேவனால் உயர்த்தப்படும் அனுப வத்தைப் பெறுவோம். தேவனுடைய பலத்த கரத்தில் நம்மைத் தாழ்த்துவோம். அதனால் ஏற்றகாலத்தில் உயர்த்தப் படுவோம். அர்ப்பணத்தை நாடி தேவனுடைய சித்தத்திற்கெல்லாம் நம்மை ஒப்படைப்போம். அது வேத புத்தகத்தின் மூலம் வெளிப்படுத்தப் பட்டிருந்தாலும் எப்படியாயினும் நமக்கு அர்ப்பணம் தேவை. நாம் தூய ஆவியானவரை ஞானத்தின் ஆவியாக வும் வெளிப்படுத்தலின் ஆவியாகவும் தேடி கிறிஸ்துவை சரியாக சோதித்து அறிந்து, அதன்மூலம் அவருடைய நாமத்தை விசுவாசித்து, அவரது வார்த் தையில் நம்பிக்கை வைத்து அவரது தியாகத்தை சார்ந்து அவரது கிருபையில் மகிழுவோம். உலகத்திற்கும் திருச்சபைக் கும் பயனுள்ளவர்களாகப் பெருகு வோம். ஆண்டவர் மிகச்சிறிய ஜந்துக் களை அவரது பணிகளை நிறைவேற்ற பயன்படுத்துகிறார். நித்தியம் மட்டுமே நமது எளிய, ஆவிக்குரிய பக்திக்குரிய வாழ்வை கண்டுபிடிக்க முடியும். எனவே அதிகமான பணியாற்ற அவரது கிருபைக்காக ஜெபிப்போம். பலனளிப் பது தேவன். கர்த்தருக்குள்நமது உழைப்பு வீண்போவதில்லை *1 கொரி.15:58.*

ஜெபத்தில் வாஞ்சை

Earnestness in prayer

R.A.Torrey (1856 - 1928)

ஜெபத்தில் ஆழமான வாஞ்சை இருந்தால் மட்டுமே தேவன் அதனை கவனித்து அதற்குப் பதில் தருகிறார். இந்த சிந்தனை வேதபுத்தகத்தில் மறு படியும் மறுபடியும் வருகிறது. பழைய ஏற்பாட்டிலும் கூட இதை வாசிக்கிறோம். **"உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர் களானால் என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்"** எரேமி.29:13. நம்முடைய ஜெபங்களில் அனேகம் கேட்கப்படாததற்கான காரணத்தை இங்கு காண்கிறோம். அந்த ஜெபங்களில் நமது இருதயம் முழுவது மாக இருப்பதில்லை. வாஞ்சையின் ஆழம் அங்கு இருப்பதில்லை. சிறிதளவு அக்கரையோடுதான் கேட்கிறார்கள். எனவே தேவன் இதற்கு ஏன் கவனம் செலுத்த வேண்டும்.

ஒருவேளை உங்களிடம் நான் இன்று காலை ஜெபித்தீர்களா என்று கேட்டால் ஏறக்குறைய எல்லாரும் 'ஆம்' என்றுதான் பதிலளிப்பீர்கள். எதற்காக ஜெபித்தீர்கள் என்று கேட்டால் ஒருவேளை சிலர்: 'நான் எதற்காக ஜெபித்தேன் என்று மறந்துவிட்டேன்' என்று சொல்லலாம். சரி அப்போது தேவனும் சொல்லுவார் 'உங்களுக்கு பதில் சொல்ல நானும் மறந்துவிட்டேன்' என்று.

ஆனால் இன்னும் சிலரிடம் இன்று காலை ஜெபித்தீர்களா என்று கேட்டால் 'ஆம்' என்ற பதிலுக்கு, எதற்காக ஜெபித்தீர்கள் என்று கேட்டால் உடனே பதில் சொல்வீர்கள். ஏனெனில் எல்லா நாளும் ஒரே காரியத்திற்காக ஜெபிக்கிறீர்கள். நீங்கள் முழங்காலில் நின்று கொண்டு தானாகவே உங்கள் ஜெபத்தை ஏறெடுக்கிறீர்கள். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று தெரியா மலே எதையோ சிந்தித்துக் கொண்டு ஜெபித்துக்கொண்டிருக்கிறீர்கள். இந்த ஜெபம் வீணானது. தேவனுடைய பெயரை வீணில் வழங்குகிறீர்கள்.

இன்னும் சிலரிடம் இந்த நாள் காலையில் எதற்காக ஜெபித்தீர்கள் என்று கேட்டால் நீங்கள் ஜெபித்த போது தேவ ஆவியானவர் உங்கள் மேல் இறங்கி யதையும், இதய கதறலோடு வாஞ்சை யோடு நீங்கள் ஜெபித்ததைக் கூறு வீர்கள். உண்மைத்தான் அது நல்லது. தேவன் உங்கள் ஜெபத்தைக் கேட்டு நீங்கள் கேட்டதை உங்களுக்கு அருளிச் செய்வார்.

நீங்கள் வல்லமையோடு ஜெபிக்க அதிக வாஞ்சை வேண்டும். உங்கள் ஆத்துமா முழுவதும் ஜெபத்தில் செலுத்தப்பட வேண்டும். இந்த சிந்தனை வேதபுத்தகத்தில் மறுபடியும் மறுபடியும் கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக, **"நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில் நான் போராடுவது போல நீங்களும் என்னோடே கூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து வினிமித்தமும் ஆவியானவருடைய அன்பினிமித்தமும் உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்"** ரோம.15:32.

"என்னோடு கூட போராட வேண்டும" என்பது மூலபதத்தில் Sunagonizo என்ப தாகும். அதில் agonizo என்பது 'திருப்தி யடைவது', 'உழைப்பது', 'போராடுவது' அல்லது யுத்தம் செய்வது என்று பொருள்படும். எனவே சரியாக அந்த வசனத்தை மொழி பெயர்த்தால் "இப்போதும் சகோதரரே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தமும், ஆவியானவரின் அன்பின் நிமித்தமும் நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால் நீங்கள் என்னோடு ஜெபங்களில் தேவனோடு எனக்காகப் போராட வேண்டும்".

(5 -ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கடினமான தலையீடு

ஜெபத்தில் போராடுவது அல்லது யுத்தம் செய்வது என்பது தேவன் நாம் விரும்புவதைத் தருவதற்காகப் போராடுவதல்ல. "ஏனெனில் மாம்சத்தோடும், இரத்தத்தோடு மல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைக களோடும் நமக்குப் போராட்டம் உண்டு" எபேசி.6:12. பிசாசோடும், அவனது பலத்த சேனைக களோடும் போராட்டமிருக்கிறது. நாம் ஜெபிக்கும் போது முக்கியமாக அவன் நம்மை எதிர்க்கிறான். சில வேளைகளில் நாம் ஜெபிக்கும் போது நரகத்தின் சேனை களெல்லாம் தேவனுக்கும் நமக்கும் இடையில் நிற்பதாகத் தோன்றுகிறது. நாம் என்ன செய்வோம்? விட்டு விடவா? அல்லவே அல்ல. உங்கள் முழுங்கால் களில் போராடுங்கள். தேவனோடு ஜெபத்தின் மூலம் போராடி வெற்றி பெறுங்கள்.

உண்மையாகவே நாம் தூய ஆவி யானவரின் வல்லமையால் போராடி தேவனிடத்தில் வெற்றி பெறுவோம். 'சேர்ந்து போராடுவது' என்பதன் மூல பதம் agone என்பதாகும். அதிலிருந்துதான் 'agony' வருகிறது. "அவர் மிகவும் வியாகுலப் பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளி களாய்த் தரையிலே விழுந்தது" லூக். 22:44.

ஜெபத்தில் போராடுதல்

"எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சேர்ந்தவனும், கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமான வைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்ச முள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று தன் ஜெபங் களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான். இவன் உங்களுக்காகவும், லவோதிக்கேயருக்காகவும், எராப்போலி யருக்காகவும், மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறா னென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்" கொலோ.4:12-13.

ஜெபத்தில் போராடுவது அல்லது வியாகுலத்தோடு போராடுவது என்றால் என்ன? நாம் ஜெபத்தினை எவ்வளவு இலகுவாக எடுத்துக்கொள்கிறோம்? நமது இதயத்தில் ஒரு சிறுபகுதி மட்டுமே ஜெபத்தில் ஈடுபடுத்துகிறோம். சிறிய அளவாகவே அது ஜெபத்தில் கவனம் செலுத்துகிறது. சிறிய அளவிலேயே தேவனோடு தொடர்பு கொள்கிறது.

இவ்வாறு கடந்த நூற்றாண்டு களில் தேவ பிள்ளைகள் பலவான்களாக பெரிய காரியங்களைச் செய்திருக் கிறார்கள். அவர்கள் அதிக வியாகுலத் தோடு ஜெபித்தவர்கள். எடுத்துக்காட்டாக உடல்நிலையில் பெலவீனனாயிருந்த **டேவிட் பிரெய்னார்டு** ஆவிக்குரியபடி பலவான் எனப்பட்டார். பல ஆண்டுகள் வியாதி யோடிருந்த அவர் இளம் வயதிலேயே மரித்தார். **டேவிட் பிரெய்னார்டு** வட பென்ஸில் வேனியாவிலுள்ள பூர்வீகக் காட்டுப் பகுதியில் வாழ்ந்த வட அமெரிக்க இந்தியர்களை ஆரம்ப நாட்களில் தேவனுக்கு நேராக வழி நடத்தினார். சில வேளைகளில் குளிர் கால இரவுகளில் காட்டிற்குள் சென்று குளிர்ந்த பனித் தரையில் முழங்காலில் நின்று ஜெபிப் பார். ஒரு அடி பனி தரையை மூடியிருந் தாலும் அவர் உடல் வெப்பத்தால் வியர்க்கும். தேவன் அவருடைய ஜெபத்தைக் கேட்டு பலத்த எழுப்புதலை அமெரிக்க இந்தியர்கள் மீது அனுப் பினார். அவர் ஒருபோதும் கேள்விப்படா ததும் சொப்பனத்தில் கூட காணாதது மான ஒரு பெரிய எழுப்புதல் ஏற்பட்டது.

ஜெபத்தில் ஆழமான வாஞ்சையைப் பெறுவது எப்படி?

வேத புஸ்தகம் இந்தக் கேள்விக்கு தெளிவாகவும் எளிதாகவும் பதில் தருகிறது. இதற்கு இருவழிகளுண்டு. ஒன்று சரியான வழி இன்னொன்று தவறான வழி. தவறான வழி என்பது மாம்ச பெலனால் கிரியை செய்வதாகும்.

ஆனால் இருதயத்தைக் கலக்கு வதும், பிழிவதுமான தேவனால் அளிக்கப்படும் வாஞ்சை ஜெபத்தில் ஏற்பட ஒரு சரியான பாதை இருக்கிறது. வேதபுத்தகம் சொல்லும் அந்தச் சரியான பாதை எது? அதை ரோமர் 8:26-27 வசனங்களில் படிக்கலாம். "அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏறெ்படி வேண்டிக்கொள்ள வேண்டிய தின்ன தென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்".

இதுவே சரியான வழி. இப்படிப் பட்ட வாஞ்சை உருவாக ஆவியான வரை நோக்கிப் பாருங்கள். அவர் மட்டுமே நமது இருதயங்களில் இந்த வாஞ்சையினை உருவாக்க முடியும். நீங்கள் வாஞ்சையற்றவர்களாக தேவ சன்னிதானத்தில் சென்றிருக்கிறீர்களா? வெறும் வார்த்தைகளால் மட்டும் ஜெபித்தீர்களா? உங்கள் இருதயம் ஜெபிக்கவில்லையா?

இத்தகைய சூழலில் நாம் செய்ய வேண்டியதென்ன? ஜெபிப்பதை நிறுத்தி விட்டு ஜெபிக்க அதிகமாகத் தோன்றும் வரை காத்திருக்க வேண்டும். ஜெபிக்க வேண்டும் என்ற உணர்வு இல்லாத வேளைதான் ஜெபிக்க வேண்டும். அமைதியாயிருந்து தேவனை நோக்கி அவரது வாக்குபடி தூய ஆவியானவரை அனுப்பி உங்கள் இருதயத்தை அசைத்து, வாஞ்சையை உருவாக்கி விழிப்படையச் செய்து தரும்படி கேட்க வேண்டும். அப்போது அவர் தூய ஆவியானவரை அனுப்பி, உங்களை வாஞ்சையோடு ஜெபிக்கச் செய்வார். அப்போது வாக்குக் கடங்காததும் வியாகுலமானதுமான ஜெபத்தை நீங்கள் ஏறெடுப்பீர்கள்.

எனது சாட்சி என்னவெனில்: ஆழமான வாஞ்சையோடு ஜெபித்த நேரங்கள் ஆரம்பத்தில் இருதயம் ஜெபம் இல்லாமலும் வெறும் வார்த்தைகள் எழும்பின வேளைகள் தான். பின்பு நான் தேவனை நோக்கிப் பார்த்து அவரது வாக்குத்தத்தத்தின் படி ஆவியானவரை அனுப்பும்படி வேண்டிக்கொண்டேன். நான் காத்திருந்த போது ஆவியானவர் என் மீது வல்லமையாக இறங்கினார். நான் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு கதறினேன்.

சிக்காகோ நகரில் ஒரு இரவை நான் மறக்கவே முடியாது. ஒரு உலக எழுப்புதலுக்கான பொதுவான ஜெபக் கூடுகை முடிந்த பின் கூடுகைகளை நடத்த என்னோடு மிக நெருக்கமா யிருந்தவர் கூடுகை முடிந்த பின் இரவு என்னிடம் வந்தார். சகோதரன் ட்டாரி அவர்களே, ஒவ்வொரு சனிக்கிழமை இரவையும் கூடுகைகள் முடிந்த பின் தேவனோடு தனிமையில் செலவழித்தால் என்ன? எப்படியும் இன்றைக்கே இரவு தேவனோடு செலவிடலாமா? என்று கேட்டார்.

அந்த நாள் ஜெபம் மறக்க முடியாதது. சில வாரங்கள் சென்ற பின் வேறுசிலரையும் அழைக்க எண்ணி பொது வான ஜெபக்கூடுகைக்குப் பின் சுமார் இரவு 10 மணிக்குப் பின் தனி இடத்தில் கூடினோம். இவ்வாறு ஆறு அல்லது ஏழு பேர் கூடி ஜெபித்தோம்.

ஒரு இரவு முழங்காலிடுவதற்கு முன்னால் தேவனிடத்தில் எதைக் கேட்பது என்று விவாதித்தோம். நீண்ட நேர அமைதிக்குப் பின் ஒருவர் "என் னால் ஜெபிக்க முடியவில்லை, ஏதோ தடை பண்ணுகிறது" என்றார். சிறிது நேரத்துக்குப் பின் இன்னொருவரும் எழும்பி: "என்னாலும் ஜெபிக்க முடியவில்லை, ஏதோ என்னை தடை பண்ணுகிறது" என்றார். அனை வருக்கும் இதே நிலைதான் காணப் பட்டது.

நாங்கள் என்ன செய்தோம்? ஜெபக் கூடுகையை நிறுத்தவா? இல்லை, ஜெபம் அப்போது எங்களுக்கு மிகவும் தேவையாயிருந்தது. தேவனுக்கு முன்பாகத் தலைகுனிந்து அவர் தூய ஆவியானவரை அனுப்பும்படி எங்க ளுக்கு ஜெப ஆவியை தந்து வெற்றி பெறும்படி ஜெபித்தோம். விரைவில் தூய ஆவியானவர் எங்கள் மீது இறங்கி னார். அந்த நாளில் நாங்கள் ஜெபித்தது போல என்றுமே ஜெபித்ததில்லை என்று சொல்லுமளவுக்கு ஜெபம் தொடர்ந்தது.

தூய ஆவியினால் நிரப்பப்பட்டு நானும் ஆச்சரியமாக ஜெபத்தைத் தொடர்ந்தேன். தேவனிடம், என்னை உலகம் முழுவதும் அனுப்பி, ஆயிரக்க ணக்கான மக்கள் சீனாவிலும் ஜப்பா னிலும், நியூசிலாந்திலும், ஆஸ்திரேலி யாவிலும், டாஸ்மேனியாவிலும், இந்தியா, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து, ஜெர்மனி, பிரான்சு மற்றும் ஸ்விட்சர்லாந்து போன்ற தேசங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க அனுப்பும்படி ஜெபித்தேன். நான் ஜெபத்தை முடித்த போது அதே இரவில் என்ன நடக்கப் போகிறது என அறிந்து கொண்டேன். அந்த ஜெபக்கூடுகை என்னை உலகம் முழுவதும் சுவிசேஷத்தை அறிவிக்க அனுப்பியது.

நாம் ஜெபத்தில் கேட்பதைப் பெற்றுக்கொள்ள இப்படி ஜெபிக்க வேண்டும். ஆழமான வாஞ்சையோடு ஜெபிக்கும் போது ஆவியானவர் வல்ல கிரியைகளை நடப்பிப்பார்.

தேவனிடமிருந்து அருமையான பொருள் ஒன்றையும் எளிதில் பெற முடியாது, பரலோக கடையில் விலை குறைவான சரக்கு இல்லை.

ஐக்கியமும் ஜெபமும் – ஒரு எழுப்புதல் குழு

Unity and prayer - A revival team

ஏறக்குறைய இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, **ஹஸ், லூதர், கால்வின்** மற்றும் சீர்திருத்தவாதிகளைப் பின்பற்றியவர்கள் பயங்கரதுன்புறுத்தல்களால் ஓடி ஒரு கனவானும் பண்பாளனுமான **கௌன்ட் ஸின்ஸென்டார்ஃப்** என்பவருடைய பண்ணையில் ஒரு இல்லத்தில் தஞ்சம் அடைந்தார்கள்.

வெளி உலகிலிருந்து பாதுகாக்கப்பட்டாலும் தங்கள் சொந்த மார்க்க உறுதியான உணர்வால் அழிக்க பயமுறுத்தப்பட்டுக் கொண்டிருந்த அவர்களை அங்கு பாதுகாப்பது யார்? விசுவாசத்திலும், அன்பிலும் வாக்கு வாதம் செய்து கொண்டிருந்த இந்தக் கிறிஸ்தவர்களை இணைப்பது முடியாத காரியமாயிருந்தது.

ஆனால் "**அவர்கள் ஜெபித்தார்கள்!**" 1727-ம் ஆம் ஆண்டு ஆகஸ்ட் ஐந்தாம் நாள் ஒரு குழுவினர் இரா முழுவதும் ஜெபித்தனர். அந்த ஜெபம் அவர்களை ஒரு சகோதரத்துவ உடன்படிக்கை ஏற்படுத்தி, "**அவர்கள் ஒத்துக் கொண்ட குறிப்புகளை கண்டுபிடித்து அவற்றை வலியுறுத்துவது மற்றும் தங்கள் வேறுபாடுகளை வலியுறுத்துவது அல்ல**" என்றும் கூறியது. ஆகஸ்டு 12-ம் நாள் அவர்கள் ஒரு நல்ல உடன்படிக்கையின் மூலம் தங்கள் வாழ்வை ஆண்டவராகிய இயேசுவின் சேவைக்கு அர்ப்பணித்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் அழைப்பையும் நிலையையும் புதுப்பித்துக் கொண்டார்கள். ஜெபம் இருதயங்களை ஒன்றிணைத்தது. ஜெபம் அனைவரையும் கிறிஸ்துவிடம் நெருங்கிச் சேரச் செய்தது.

ஆகஸ்ட் 13 ஞாயிற்றுக்கிழமை, அனைத்து குழுவினர் மேலும் வல்லமையாய் ஆவியானவர் இறங்கினார். போதகரும் ஜனங்களும் தூளில் உட்கார்ந்து தங்களைத் தாழ்மைப்படுத்தினார்கள். ஒரே மனதோடு நடு இரவு மட்டும் ஜெபத்திலும், பாடுவதிலும், கண்ணீர் சிந்துவதிலும், வேண்டுதலிலும் தொடர்ந்து இருந்தார்கள்.

ஜெபம் அவர்களை ஒன்றிணைத்தது. ஜெபம் ஆவியானவரின் புதிய மழையைக் கொண்டு வந்தது. இந்த ஆசீர்வாதங்களால் அதிகமான ஜெபத்தையும் ஆழமான ஜெப வாழ்வையும் கொண்டு வந்தது. ஆகஸ்ட் 26-ம் நாள் இருபத்து நான்கு ஆண்களும் பெண்களும் ஆண்டவரோடு ஒரு உடன் படிக்கை செய்து நடுஇரவிலிருந்து மறுநாள் நடுஇரவுவரை ஒவ்வொருவரும் வெவ்வேறு நேரங்களில் ஜெபிக்க முடிவு செய்தனர். அடுத்த நாளே இந்த **24 மணிநேர ஜெபம்** ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து **நூறு ஆண்டுகள்** தடையின்றி நடந்தது.

ஜெபம் செயல்படுவதற்கு வழி நடத்துகிறது

அத்தியட்சர் **ஹாசே** என்பவர் இவ்வாறு எழுதுகிறார்: 1727-ம் ஆண்டு ஆரம்பித்து நூறு ஆண்டுகள் தொடர்ந்த ஜெபக்குழுபோல் சபை சரித்திரம் முழுவதிலும் இப்படிப்பட்ட ஒரு ஆச்சரியமான ஜெபக்குழு இருந்ததே இல்லை!.

இத்தகைய ஜெபம் கிரியை செய்ய வழிநடத்தும். இந்த விஷயத்தில் அது கிறிஸ்துவையும் அவரது இரட்சிப்பையும் அறியாத இழந்து போன மக்களுக்கு அவரை அறிவிப்பதற்கான ஒரு பற்றிஎரியும் வாஞ்சையை அது தூண்டியது. அது அந்நிய நாடுகளுக்கு மிஷனெறிகளை அனுப்பும் ஒரு ஆரம்பமாயிருந்தது. அந்த ஒரு சிறிய கிராம சமுதாயத்திலிருந்து நூற்றுக்கும் அதிகமான மிஷனெறிகள் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் அனுப்பப்பட்டார்கள்.

இதுதான் இருதயங்கள் ஒன்று சேர்ந்த ஜெபத்தின் பலன். இந்த ஜெபத்தின் ஆவிக்குரிய பலன் கிடைத்து விட்டது. இந்த ஆச்சரியமான ஜெப எழுப்புதலைத் தொடர்ந்து "**தனி நபர்களுடன் தனிப்பட்ட பணி இங்கே தொடங்கப்பட்டது**". தூய ஆவியானவரின் இந்த வல்லமைமிக்க ஞானஸ்நானமும் அதிலிருந்து நம்முடைய நாட்கள் வரை பாய்ந்த அனைத்தும், ஊக்கமான மற்றும் விடாமுயற்சியுடன் கூடிய ஜெபத்திற்குப் பதிலாகும். மொரேவிய கிறிஸ்தவர்களின் இந்த சிறிய கிராமத்திலிருந்து மிஷனெறிகள் உலகின் அனைத்துப் பாகங்களுக்கும் சுவிசேஷ அக்கினியை எடுத்துச் சென்றனர்.

1736-ல் அமெரிக்காவுக்கு நேராக ஒரு கப்பலில் சென்றனர். இரண்டு வாலிப ஆங்கிளிக்கன் மிஷனெறிகளும் அதே கப்பலில் இருந்தனர். ஒரு பயங்கர புயல் வந்து கப்பல் விபத்துக்குள்ளாகும் அபாயம் நேரிடுவதாயிருந்தது. வாலிபரான **ஜான் வெஸ்லி** அதைக் குறித்து தமது நாட்குறிப்பில் எழுதியதை படிப்போம்:

ஏழு மணிக்கு நான் மொரோவியர்களிடம் சென்றேன். நீண்ட நேரமாகவே நான் அவர்களது தீவிர நடவடிக்கையினை கவனித்தேன். மற்ற பயணிகளுக்கு அவர்கள் செய்த சேவைகள், அவர்களின் தாழ்மைக்கு தொடர்ந்து சான்றளித்தன. நாம் யாரும் அப்படிப்பட்ட சேவையை செய்ய மாட்டோம். அவர்கள் மனவிருப்பத்தோடு, எந்த எதிர்பார்ப்பில்லாமல் இந்தக் கடமைகளை செய்தனர். "**அது அவர்களின் பெருமை மிக்க இருதயத்திற்கு நல்லது**" என்றும், அவர்களின் அன்பான இரட்சகர் அவர்களுக்காக அதிகமாகச் செய்துள்ளார் என்றும் கூறினார்கள்.

"ஒவ்வொரு நாளும் அவர்கள் சாந்தகுணம் செயல்களாக வெளிப்பட்டது. அவர்கள் பிடித்துத் தள்ளப்பட்டாலும், அடிக்கப்பட்டாலும், கீழே எறியப்பட்டாலும் எழும்பி அமைதியாக வெளியே செல்வார்கள். எந்த பராதும் அவர்கள் வாயிலிருந்து புறப்பட்டதில்லை. இப்போது அவர்கள் பயத்தின் ஆவியிலிருந்தும், பெருமை, கோபம், மற்றும் பழிவாங்கும் மனநிலையிலிருந்தும் விடுவிக்கப்பட்டார்களா என்பதை காண்பிக்க ஒரு தருணம் ஏற்பட்டது.

அவர்கள் பாடலோடு ஆராதனையை ஆரம்பித்த போது கடல் பொங்க ஆரம்பித்தது. முக்கியமான பாய் பல துண்டுகளாக கிழிந்தது. கப்பல் முழுவதும் தண்ணீரால் நிரம்பியது. கடல் எங்களை விழுங்கிவிட்டது போல உணர்ந்தோம். கப்பலில் கடும் கூச்சல் எழும்பியது. ஆனால் மொரோவியர்கள் பாடிக் கொண்டே இருந்தனர்.

அவர்களில் ஒருவரிடம் பின்பு நான்: "**நீங்கள் பயப்படவில்லையா?**" என்று கேட்டேன். அதற்கு அவர்: "**இல்லை, தேவனுக்கு நன்றி**" என்று பதிலளித்தார். "**உங்கள் பெண்களும் பிள்ளைகளும் கூட பயப்படவில்லையா?**" என்று கேட்டேன். அவர் பதிலாக அமைதியான குரலில் "**எங்கள் பெண்களும் பிள்ளைகளும் கூட மரணத்தைக் கண்டு பயப்படுவதில்லை**" என்றார்.

அவர் இங்கிலாந்து திரும்பிய போது **ஜான் வெஸ்லி** இவ்வாறு எழுதினார்: "நான் அமெரிக்கா சென்றது இந்தியர்களை மனமாற்றமடையச் செய்ய, ஆனால் யார் என்னை மாற்றமடையச் செய்ய முடியும்? அவிசுவாசம் நிறைந்த இந்தத் தீய இருதயத்தினை யார் மாற்ற முடியும்? நான் ஒரு நல்ல பாடம் கற்றுக்கொண்டேன். ஆபத்து இல்லாத வேளையில் நான் நன்கு பேசலாம், ஆனால் மரணம் நெருங்கும் போது **'சாவு எனக்கு ஆதாயம்'** என்று சொல்ல முடியுமா?"

வெஸ்லி ஒரு நெருப்பைப் பற்ற வைத்தார்

இங்கிலாந்தின் சபை, சடங்குகளால் மரித்த நிலையில் இருக்கும் போது, இந்த வாலிபனின் இருதய வாஞ்சை எப்படி நிறைவேறும்? ஒரு சிறு குழுவினர், ஒரு மொரேவியன் மிஷனெறி மூலம் நடத்தப்பட்ட ஒரு கூடுகையில் லண்டனிலுள்ள ஆல்டர்கேட் தெருவில் கலந்து கொண்டார்கள். அன்று 1738 மேய் மாதம் இருபத்து நான்காம் நாள்.

வெஸ்லியும் அதில் கலந்து கொண்டார். அது ஒரு ஜெபக்கூடுகை தான். அவரது இருதயம் வித்தியாசமாக அனல் கொண்டிருந்தது. அவர் தாம் தமது இரட்சிப்புக்கு கிறிஸ்துவை மட்டுமே நம்பினார் என உணர்ந்தார். கிறிஸ்து நமது பாவங்களைச் சுமந்து விட்டார் என்றும் எனவே பாவம் மரணம் ஆகியவற்றின் கட்டளையிலிருந்து இரட்சிக்கப்பட்டுவிட்டதையும் உணர்ந்தார்.

ஆனால் லெக்கி என்பவர் தமது 'History of morals' என்ற நூலில் வெஸ்லியின் மனமாற்றத்தைக் குறித்து, "**அந்தச் சிறிய அறையில் அன்று நடந்தது இங்கிலாந்தில் பிட் என்பவர் தரையிலும் கடலிலும் பெற்றுக்கொண்ட எல்லா வெற்றிகளை விட மிக முக்கியமானது**" என்றெழுதினார். விசுவாசத்தின் உபதேசம் ஒரு ஜெபக் கூடுகையில் ஆரம்பமானது.

அந்த வருடத்தில் இன்னொரு ஜெபக்கூடுகையும் நடந்தது. அதைக் குறித்து வெஸ்லி இவ்வாறு எழுதுகிறார்:

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

(1 ஜனவரி 1739) காலை 3 மணிக்கு ஜெபத்தில் தரித்திருந்த போது தேவனுடைய வல்லமை எங்கள் மீது வல்லமையாய் இறங்கியது. சிலர் தரையில் விழுந்தனர். சிலர் அதிக சந்தோஷத்தால் கூச்சலிட்டனர். சில நிமிடங்களில் எல்லோரும் சேர்ந்து, "தேவனே நாங்கள் உம்மைப் புகழுகிறோம். நீரே எங்கள் கர்த்தர்" என்று குரலில் கூறினோம்.

*ஆண்டவரைக் கருத்தாய் தேடின அக்குழுவில், ஜான் வெஸ்லியுடன் அவரது சகோதரன் **உவைட்ஃபீல்டும்** நாற்பதற்கும் அதிகமானவர்களுமிருந்தார்கள்.*

*அடுத்த நாள், F.B.மேயர் இப்படி எழுதினார்: **உவைட்ஃபீல்டு** பிரிஸ்டால் வந்து தூய ஆவியின் வல்லமையால் பிரசங்கித்தார். ஏறக்குறைய ஒரு மாதத்திற்குப் பிறகு வெஸ்லி தொடர்ந்தார். நாற்பது ஆண்டுகள் அவர்கள் தேசத்தி லெங்கும் அலைந்து திரிந்து எதிர்ப்புகளின் மத்தியில் பணி செய்தார்கள். வெஸ்லியின் பிரசங்கங்களைக் கேட்டால் அவை விரும்பப்படத்தக்கதாயிருக்கும். ஆனால் அவற்றை மிகச் சிறப்பானவை என்று சொல்ல முடியாது. ஆனால் அவற்றில் தூய ஆவியானவர் எவ்வாறு உத்தமமான ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார் என்பது தெரிய வரும்.*

மேரி மான்சனும் தேவனுடைய உத்தமமும் -- பகுதி 1

Marie Monsen and the faithfulness of God - Part 1

மேரி மான்சன் - தேவன் ஒரு முக்கிய பாத்திரமாக பயன்படுத்திய நார்வேஜியன் மிஷனெறி. வட சீனாவில் 1927-ல் ஆரம்பித்து தொடர்ந்து பல்லாண்டுகள் நீடித்த எழுப்புதலில் பெரும் பங்காற்றியவர். பல ஆண்டுகள் தேவன் அவர்களை சீனாவின் முக்கிய மாகாணங்களில் சில இடங்களில் கொள்ளைக்காரர் நிறைந்த பாதைகளையும் கடந்து செல்ல வேண்டியதாயிருந்தது. எனவே அவர்களுடைய ஜெபங்களில் ஒன்று தான் இப்படிப்பட்டவர்களின் கைகளில் அகப்படக் கூடாது என்பதாகும். ஆண்டவர் அவர்களைப் பாதுகாத்தார். கீழே குறிப்பிடும் சம்பவத்தில் 1929-ம் ஆம் ஆண்டில் ஒரு சிறு கப்பலில் பிரயாணம் பண்ணியதைக் குறிப்பிடுகிறார்கள். அக்கப்பலில் அவர்கள் மட்டுமே ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள். அக்கப்பல் சீனாவின் கடற்கொள்ளையர்களால் பிடிக்கப்பட்டதால் அவர்களுடைய கைதியாக இருபத்து மூன்று நாட்கள் இருந்தார்கள். வரும் ஆண்டுகளில் தேவனுக்குப் பணிவிடை செய்ய அவர்கள் ஆயத்தப்படுத்தப்பட்டதைக் குறித்து அவர்கள் கூறுவதைக் கேட்போம்.

1929-ம் ஆண்டின் ஆரம்பத்தில் ஷான்ஷி மாகாணத்தின் மையப் பகுதியில் பல நாட்கள் கடுமையாக உழைத்த பின் பீக்கிங் சென்றேன். பத்து நாட்கள் இளைப்பாற வேண்டும் என்ற திட்டத்துடன் சென்றேன். சில அமெரிக்க நண்பர்கள் ஒரே மனதுடன் எழுப்புதலுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தனர். எனது எதிர்பார்ப்பு ஒரு நீண்ட கால சந்திப்பின் மூலம் ஏப்ரல் 22-ல் ஷான்டங் என்ற இடத்தில் அவர்களை சந்திப்பதாக இருந்தது. ஜெபித்த நண்பர்களின் ஜெபம் கேட்கப்பட்டு சீனாவில் எங்கும் காணாத எழுப்புதலை அங்கு கண்டேன்.

பத்து நாட்கள் இளைப்பாற எண்ணிய நான் அதைக் குறைத்துக் கொண்டு ஜெபிப்பதிலும், பண்ண வேண்டிய பிரயாணத்துக்காகவும் செய்ய வேண்டிய பணிக்காகவும் ஜெபித்த போது, "19-ம் நாள் கப்பல் இருந்தால் அதே நாளில் போய் விடு" என்ற சத்தத்தை ஒவ்வொரு நாளும் கேட்டேன். நான் டியென்ட்ஸின் என்பவருக்கு பத்தொன்பதாம் தியதி ஏதேனும் கப்பல் இருந்தால் அதில் நான் வர விரும்புவதாக அறிவித்தேன். அழைப்பும் வந்தது. கப்பல் இருந்தது. ஆனால் எல்லா இருக்கைகளும் நிரம்பி விட்டன.

ஆயினும் நான் அதிலே பிரயாணம் பண்ணுவதானால் என் பரம தகப்பன் ஒரு இருக்கை ஆயத்தப்படுத்தித் தருவார், இல்லையென்றால் இன்னும் சில நாட்கள் டியென்ட்சன் என்பவருடன் சீனா உள்நாட்டு மிஷன் இல்லத்தில் தங்க வேண்டியது என்று எண்ணிக்கொண்டேன்.

பிற்பகலில் செய்தி மூலம் ஒரு அறையை விட்டுக் கொடுப்பதாக அறிந்தேன். எனது பரம தகப்பன் அந்த அறையை எனக்கு ஆயத்தம் பண்ணிக் கொடுத்தார் என்று அவரைத் துதித்தேன்.

இந்தக் காரியத்துக்குப் பின்பு 'ஏனெனில் சனற்று ஆப்பிள் பழங்களை வாங்கிக்கொள்' என்று கூறும் சத்தத்தைக் கேட்டேன். "என்னிடம் ஏராளம் பொருட்கள் இருக்கிறதே, இன்னும் பதினைந்து மணி நேரங்களில் போய் விடலாமே" என யோசித்தேன்.

ஆயினும் அந்த எண்ணம் என்னை விட்டுப் போகவில்லை. எனவே ஒருவேளை யாராவது சுகவீனரை சந்திக்க வேண்டியதாயிருக்கும் என்று எண்ணி ஏராளமான ஆப்பிள்களையும் வாங்கிக் கொண்டேன்.

அடுத்தநாள் காலை நான் ஜெபித்த போது என்னிடமுள்ள பணத்தையெல்லாம் டியென்ட்சினிடம் ஒப்படைக்கும்படி உணர்த்தப்பட்டேன். அப்படியே செய்தேன்.

எங்கள் பாதையில்

ஒரு ஆங்கில மிஷனெறியோடு பனிரெண்டு மணிக்கு புறப்படும் கப்பலுக்குச் சென்றோம். கப்பல் எரிபொருள் நிரப்பி புறப்படும் வரை நான் மேல்தளத்தில் பிரயாணிகளோடு பேசிக்கொண்டும் துண்டுப்பிரதிகளை வினியோகித்துக் கொண்டுமிருந்தேன்.

மூன்று பிரயாணிகளை நான் விசேஷமாகக் கவனித்தேன். கொள்ளைக்காரர்கள் நிறைந்த ஹோனன் மாகாணத்தில் நான் இருந்திருந்தால் அவர்களைக் கொள்ளையர்கள் என்றுதான் சொல்லியிருப்பேன். ஆனால் நாகரிகம் நிறைந்த டியென்ட்ஸின்னில் அது இருக்க முடியாது.

ஆனால் அவர்கள் கொள்ளையர்கள்தான்! அவர்களில் இருபது பேர் டியென்ட்ஸின்னிலிருந்து எங்களோடு பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தனர். நான் அவர்களுக்கும் துண்டுபிரதிகள் கொடுத்து பேசவும் செய்திருந்தேன்.

சாயங்காலம் பிந்திய வேளையில் கப்பல் புறப்பட்டது. காலநிலை வேறுபட்டு புயல் ஆரம்பமாகி, கடல் கொந்தளித்தது. கப்பலைத் தீவிரப்படுத்தியதால், அடுத்தநாள் விடியும் நேரம் ஷான்டங் கரையைப் பார்க்கலாம்.

கடற்கொள்ளையர்களின் கைகளில்

நாங்கள் புறப்பட்டது முதல் இரண்டு கொள்ளையர்கள் குண்டு நிரப்பிய துப்பாக்கிகளுடன் நின்று தென்கிழக்கு திசைக்குச் செல்வதற்குப் பதிலாக தென்மேற்காகச் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

தரைக்கு அருகாமையில் வந்தது. வெடிச்சத்தமும் கூக்குரலும் கப்பல் முழுவதும் கேட்டது. அப்போது நாங்கள் கொள்ளையர்கள் கைகளில் அகப்பட்டுக் கொண்டோம் என்று அறிந்து கொண்டோம்.

எனது உள்ளத்தில் ஒரு குரல் ஒலித்தது: "இது உன் விசுவாசத்திற்கான சோதனை". எனது மனதிற்குள் ஒரு அனல் ஏற்பட்டது. கர்த்தரோடு சந்தோஷமாக இப்போதும் நடக்க வேண்டும்என்பது தான். "அவர் என்னைத் தமக்கு மிக அருகில் வைத்துக் கொள்வாராக" என்பது மட்டுமே இந்தக் குழப்பத்திற்கிடையில் ஒரே வாஞ்சையாயிருந்தது.

ஏறக்குறைய அறுபதுக்கும் மேற்பட்ட கொள்ளையர்கள் கப்பலுக்குள் ஏறி விட்டார்கள். முதலாவது என் மனதில் வந்த வசனம் ஏசாயா 41:10. இது ஹோனனில் நான் இருக்கும் போது அடிக்கடி நினைப்பூட்டிய வசனம். நான் எப்போதும் அதைத் திரும்பத் திரும்ப கூறுவது போல சத்தமாகக் கூறினேன். "**பயப்படாதே மேரி, ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன். மேரி கலங்காதே, நான் உன் தேவன் உன்னைப் பலப்படுத்துவேன், உனக்கு உதவி செய்வேன் மேரி, உன்னை என் நீதியின் வலது கரத்தால் நிலை நிறுத்துவேன்**".

பல நாட்களுக்கு முன்னால் நான் ஹோனன் மாகாணத்தில் இருந்த போது கர்த்தர் என்னிடம் பயப்படக்கூடாது எனக்கூறியிருந்தார். நான் அவருக்குப் பதிலாக "நான் கீழ்ப்படிவேன் ஆண்டவரே, நான் பயப்படமாட்டேன்" என்றேன்.

எல்லா அறைக் கதவுகளும் திறக்கப்பட்டன. பிரயாணிகள் வெளியே செல்ல கட்டளை பிறக்கப்பட்டது. அவரவர் தங்கள் உடைமைகளை அறையிலே வைக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. கடல் சீற்றம் நிறைந்து அலைகள் உயரமாக எழும்பின. எனது அறைகதவும் குறடால் திறக்கப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

"கதவின் நிலைக்கால்களில் அடுக்குக்குட்டியான வரின் இரத்தம் தெளிக்கப்பட்டது" என்ற வசனம் அவர்கள் கதவைத் தள்ளியபோது என் மனதில் வந்தது. ஒரு பழைய டானிஷ் பாடல் தொடர்ந்து உள்ளத்தில் தொனித்தது.

மறுபடியும் மறுபடியும் அவர்கள் என்னை அறையை விட்டு வெளியேறும் படி கூறினார்கள். அந்த அறை ஜெபத்தின் மூலம் எனக்கு கொடுக்கப்பட்டது, எனவே அங்கேயே இருக்க தீர்மானித்தேன். நான் ஒருத்தி மட்டுமே கிறிஸ்தவளாகவும் அன்னிய நாட்டவளாகவும் இருந்தேன்.

ஒவ்வொரு முறை அவர்கள் என்னை வெளியே செல்லும்படி சொன்ன போதும் தேவனுடைய வாக்குத் தத்தங்கள் துளிர்கால மழை போல இறங்கி வந்தன. அவற்றை நான் ஏற்றுக் கொண்டேன். தேவனுக்கு நன்றியும் சொன்னேன். "அந்தந்த நாளுக்குரிய பெலன் அண்டவர் தருகிறார்" என்று நான் ஆழமான நன்றியுடன் தேவனை ஸ்தோத்தரித்தேன்.

நமது முழங்காலில் செய்து முடிக்கும் பணி

Workdone on our knees

Lois J Stucky (1928 - 2014)

இந்தப் பத்திரிகையைப் படிக்கும் அனேகர் முதிர்ந்த பக்திமான்களாகவும், ஜெபத்தில் நல்ல அனுபவமுள்ளவர்களாகவும், விசுவாசத்தில் உறுதியுடையவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் இருதயத்திலிருந்து விசுவாச ஜெபம் ஏறெடுத்து தேவனை மகிமைப்படுத்தி, அவரது ராஜ்யத்தை விரிவுபடுத்துகிறீர்கள். அவர் நம்மை உற்சாகப்படுத்தும் வசனம் இது: "இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" எரே.32:27. உலகம் எங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவிப்பது முடிவடையவில்லை. நீங்கள் தேவனுடைய அறுவடைக் களத்தில் ஒரு பணியாளராக ஜெபத்தின் மூலம் செயல்படுங்கள்.

நமது முதல் ஜெபம் நமக்காகவும் நமது தேவைகளுக்காகவும் இருந்தாலும் அது வாஞ்சையால் தூண்டப்பட வேண்டும். நமது மாம்சம் எதையும் செய்யக்கூடாதது. தேவ அன்புதான் நமது உள்ளத்தில் தூய ஆவியானவரால் ஊற்றப்பட்டு, ஜெபத்தில் பாரங்கொள்ள நம்மை நெருக்கி ஏவுகிறது. அதன்பிறகு ஜெபத்திற்காக ஒரு சமயத்தை ஒழுங்காக ஒதுக்குகிறோம். இதற்கிடையில் சத்துருவும் பல தடைகளை கொண்டு வந்து விடுகிறான்.

நம்மைச் சுற்றிலும் நமக்கு நெருக்கமானதும் அன்பானதுமான குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் நமது ஜெபம் தேவை. சபையிலிருக்கும் அனேகர் ஆவியான வரின் ஜீவனையும் அக்கினியையும் இழந்து விட்டார்கள். நமது சமுகங்களில் நடக்கும் இருதயங்களைக் கிழிக்கக் கூடிய சம்பவங்கள் நமது ஜெபங்களை எதிர்பார்க்கின்றன. நமது தேசங்கள் வெகுவிரைவாய் கீழ்நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு நமது வலுவான ஜெபம் தேவை. அழிவுக்கு நேராகக் கடந்து சென்று கொண்டிருக்கும் திரள்கூட்ட மக்களுக்காகவும், இவ்வுலக தெய்வங்களால் குருடாக்கப்பட்ட உலகத்துக்காகவும், மகிமையான சுவிசேஷத்தை இதுவரை கேட்காத மக்களுக்காகவும் நாம் ஜெபிப்பது அவசியம்.

தேவன் நமது பார்வையை விரிவாக்க வேண்டும். தேசங்கள் தேவ நாம மகிமைக்காக சேர்க்கப்பட வேண்டும். தேவனுடைய பூரணமான ஆசீர்வாதங்களைக் கேட்க வேண்டும். அவர் தமது ஆவியை மாம்சமான யாவர் மேலும் ஊற்றுவதாக யோவேல் தீர்க்கர் மூலம் வாக்களித்தார். ஊற்றுவது என்பது ஏராளத்தை குறிக்கிறது.

தேவனுடைய இருதயத்தின் மகத்துவத்தைப் பாருங்கள்! அவர் எல்லாருமே மனந்திரும்பி இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கிறார். தனது குமாரனின் மரணத்தின் மூலமாகவும் தூய ஆவியானவரின் வல்லமை மூலமாகவும் மனந்திரும்பி விசுவாசிக்கிறவர்களை தம்மிடம் சேர்த்துக்கொண்டு மறுவாழ்வை அளிக்கிறார். நாம் ஜெபத்தின் மூலம் வெற்றி வீரரான திரியேகருடன் உடன் ஊழியராக நம்மை அர்ப்பணிப்போம். நம்முடைய இந்தக் குறுகிய வாழ்வில் அது நம் வாழ்வின் ஒரு பகுதியாயிருக்கட்டும். "நம்பிக்கை இல்லாமல் கோடிக்கணக்கான மக்கள் வாழும் போது" - தேவனே எங்களை ஜெபத்தின் மூலம் அங்கு அனுப்புவீராக.

ஆபத்து இல்லாத வேளையில் நான் நன்கு பேசலாம், ஆனால் மரணம் நெருங்கும் போது '**சாவு எனக்கு ஆதாயம்**' என்று சொல்ல முடியுமா?"

ஜெபத்தின் மிகப்பெரிய நன்மைகள்

The great benefits of prayer

Jonathan Edwards (1703 - 1758)

தொடர்ந்து வாஞ்சையோடும் விடாமுயற்சியோடும் ஜெபிப்பது பெரிய நன்மைகளைத் தரும். புதிய தன்மையை செழித்து வளரச் செய்யவும் ஆத்துமா முன்னேறவும் மிகச் சிறந்த வழி ஜெபம் என்றால் மிகையாகாது. தேவனோடுள்ள தொடர்புக்கும், அவரை அறியும் அறிவில் வளரவும் இதுபோன்ற சிறந்த வழி ஒன்றில்லை. உலகத்தின் மாயைகளிலிருந்து இருதயம் விலகவும் மனம் பரத்திற்குத் திரும்பவும் ஜெபம் அவசியம். ஜெபம் பாவத்திலிருந்து நம்மைப் பாதுகாப்பதில் சிறப்பானது. சாத்தானின் தந்திரங்களிலிருந்தும் பழைய பாம்பாகிய அதன் விஷத்திற்கு எதிரான தடுப்பு மருந்தாகவும் இருக்கிறது. இருதயத்தின் பேராசைகள் சீர்கேடுகள் இவற்றிலிருந்து விடுபடும் பெலனைப் பெறவும் உலகக் கண்ணிகளிலிருந்து தப்பிக் கொள்ளவும் ஜெபம் அவசியம்.

ஆத்துமாவை ஜெபம் விழிப் புணர்வோடு காத்துக்கொள்ளும் தன்மையுடையது. தேவனோடு கட்டுப்பாட்டுடன் நடக்கவும், நற்கிரியைகளில் பெருகவும், கிறிஸ்துவின் உபதேசங்களைக் கைக்கொள்ளவும் ஜெபம் ஆதரவாயிருக்கிறது. நமது நற்கிரியைகளை மக்கள் பார்த்து பரலோக பிதாவை மகிமைப்படுத்துவதற்குக் காரணமாயிருப்பது ஜெபம். கருத்தோடு ஜெபிப்பதால் ஒழுங்கான வாழ்க்கை வாழ்வதோடு இனிய வாழ்வு வாழவும், கிறிஸ்துவோடு இன்ப உறவுடன் அவரது முகப் பிரகாசத்தால் திரளான சந்தோஷத்தைப் பெற ஜெபம் ஏதுவாயிருக்கிறது.

நாம் பெரிய வல்லமையைப் பெறவும் ஒழுங்காக ஜெபித்தால் குறிப்பிடப்பட்ட நன்மைகளைக் காணவும் ஜெபம் காரணமாயிருக்கிறது. நாம் ஜெபத்தினால் யாக்கோபைப் போல தேவனோடு போராடவும் ஆசீர்வாதங்களைப் பெறவும் முடியும். யாக்.5:16-18 வசனங்கள் ஜெபத்தின் வல்லமையை பிரதிபலிக்கின்றன. தேவனை நோக்கிக் கூப்பிடுதலாகிய இந்தப் பெரிய கடமையை உதாசீனம் பண்ணுவதால் நீங்கள் எவ்வளவாக இழப்பை சந்திக்க நேரிடுகிறது என்பதை உணர முடியும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு :

- நமது முதல் **ஜெபம்** நமக்காகவும் நமது தேவைகளுக்காகவும் இருந்தாலும் அது வாஞ்சையால் தூண்டப்பட வேண்டும்.
- நம்மைச் சுற்றிலும் நமக்கு நெருக்கமானதும் அன்பானதுமான குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் நமது **ஜெபம்** தேவை.
- **ஜெபத்தில்** ஆழமான வாஞ்சை இருந்தால் மட்டுமே தேவன் அதனை கவனித்து அதற்குப் பதில் தருகிறார்.
- புதிய தன்மையை செழித்து வளரச் செய்யவும் ஆத்துமா முன்னேறவும் மிகச் சிறந்த வழி **ஜெபம்** என்றால் மிகையாகாது.
- உலகத்தின் மாயைகளிலிருந்து இருதயம் விலகவும் மனம் பரத்திற்குத் திரும்பவும் **ஜெபம்** அவசியம்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason